யா /வாதரவத்தை விக்னேஸ்வர

வித்தியாலயம்

புத்தூர்

# Prize Day – 2014

# Principal's Report

பரிசில் நாள் - 2014

அதிபர் அறிக்கை

**Chief Guest:**

**Mr.P.Arunakirinathan Esq**

(Deputy Director of Education,Jaffna Zone)

**Special Guest:**

**Mr.G.Ratnasingam Esq**

(Manegar.Teacher's centere)

**Hon-Guest**

**Mr.Saba.Kugathasan Esq**

(Ret.V.Principal)

**Mr.K.Sundaravel Esq**

(Old Student)

J/VATHARAWATTAI VIGNESWARA VIDYALAYAM

PUTTUR

# பரிசில் நாள் - 2014

காலம்: 07.11.2014 வெள்ளிக்கிழமை மு.ப.10.00

இடம்: பாடசாலையின் பிரதான மண்டபம்

## தலைமை

திருமிகு.J.A.தவநாயகம் அவர்கள்,
(பாடசாலை முதல்வர்)

## பிரதம விருந்தினர்

திருமிகு. பொன். அருணகிரிநாதன் அவர்கள்,
(பிரதிக்கல்விப் பணிப்பாளர்,யாழ் கல்வி வலயம்)

## சிறப்பு விருந்தினர்

திருமிகு . ஞா. இரத்தினசிங்கம் அவர்கள்,
(முகாமையாளர், ஆசிரிய வள நிலையம், யாழ் கல்வி வலயம்)

## கௌரவ விருந்தினர்

திருமிகு. சபா. குகதாசன் அவர்கள்
(ஓய்வு நிலை பிரதி அதிபர் யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி)

திருமிகு. க.சுந்தரவேல் அவர்கள்
(பழைய மாணவர், உபதவிசாளர் வலி கிழக்கு மத்தியஸ்தர் சபை)

# நிகழ்வுகள்

விருந்தினர் வரவேற்பு

கொடியேற்றல்

- மங்கள ஒளியேற்றல்
- இறைவணக்கம் - வித்தியாலய மாணவர்கள்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை – திரு. மு. பேரின்பமூர்த்தி
- அதிபர் அறிக்கை
- மாணவர் பேச்சு
- பரிசில் வழங்கல் - விருந்தினர்கள்
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- கலை நிகழ்வுகள்
- நன்றியுரை

## மகுடவாசகம் MOTTO

Duty First And Foremost

## எமது நோக்கு OUR VISION

அறிவுடன் ஆற்றலும், கலையுடன் பண்பாடும் அமைவுறப் பெற்று,
சமநிலை ஆளுமைகொண்ட நற்பிரசைகளைச் சமூகத்திற்கு வழங்கல்.

**Generating good Citizens endowed With knowledge and Capabilities, art and culture and a balanced Personality.**

---

## எமது பணி OUR MISSION

1. பயனுறுதிமிக்க கற்றற் செயற்பாடுகளினூடாக தேர்ச்சி இலக்கினை நோக்கிப் பயணித்தல்.
   **Progressing towards Competency Goalsthrough effective learning activities.**

2. விளைதிறன்மிக்க கற்றற் பேறுகளைக் கொண்ட மாணவர்மையக் கற்றற் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.
   **Planning and implementing student-centred Learning activities Which have Productive learning outcomes.**

3. நல்லொழுக்கம், மானிடவிழுமியம், தலைமைத்துவம், 21 ஆம் நூற்றாண்டின் தொழில் மற்றும் வாழ்வியல் உலகிற்கான பிரவேசம், சவால்களை வெற்றி கொள்ளும் திறன் ஆகியன கற்றற் பேறுகளில் பிரதிபலிக்கச் செய்தல்.
   **Reflecting in learning outcomes high moral standards,human values,leadership qualities,requisites for entry into the world of work and life in the 21$^{st}$ century and ability to overcome challenges.**

4. இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முழுமையான பங்களிப்புக்கும், ஆற்றல் வெளிப்பாட்டுக்கும் வழிவகுத்தல்.
   **Guiding for full involvement in co-curricular activities and for bringing out full potentials.**

# பரிசில் நாள் அதிபர் அறிக்கை - 2014

எமது வித்தியாலயத்தின் 2014 ஆம் கல்வி ஆண்டின் இன்றைய பரிசில் நாள் விழா அரங்கேற வாய்பளித்த எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு இந்நந்நாளில் இங்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் வருக! வருக! என வரவேற்றுக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய பரிசில் நாள் விழாவில் பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் மதிப்புக்குரிய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் ஆசிரிய வள நிலைய முகாமையாளர் திரு. ஞா. இரத்தினசிங்கம் அவர்களே, கௌரவ விருந்தினர்களாக வருகை தந்திருக்கும் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் திரு. சபா. குகதாசன் அவர்களே, பழைய மாணவர் திரு. க. சுந்தரவேல் அவர்களே, அயற் பாடசாலைகளின் அதிபர்களே, ஆசிரியர்களே, எமது முந்நாள் ஆசிரியர்களே, அன்பார்ந்த பெற்றோர்களே, பழைய மாணவர்களே, எமது பாடசாலையின் அன்புக்குரிய ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே அனைவருக்கும் எனது இனிய வணக்கத்தினை இவ்வேளையில் தெரிவித்துக் கொண்டு பரிசில் நாள் அறிக்கையினைத் தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது இன்றைய பரிசில் நாள் விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. அருணகிரிநாதன் அவர்கள் தீவகத்தின் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரியராக, பின் அதிபராகப் பணியாற்றி இன்று கல்வி நிர்வாகியாகப் பணியாற்றி வருகின்ற இவர் கலைமாணிப் பட்டத்துடன் கல்வி முதுமாணிப் பட்டமும் பெற்றவராவார். நுவரெலியா புனித ஜோசப் வித்தியாலயம், யா / நாரந்தனை கணேசா வித்தியாலயம் என்பனவற்றில் ஆசிரியராகவும், வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம், தீவகத்தின் முன்னணிப் பாடசாலைகள் ஒன்றான வேலணை மத்திய கல்லூரி ஆகியனவற்றில் அதிபர் தரத்துடன் அதிபராகவும் பணியாற்றியதுடன், கல்வி நிர்வாக சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டு 2012 முதல் தீவகக் கல்விவலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும், 2013 முதல் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார். கல்வி முகாமைத்துவப் பணியில் துடிப்புடன் செயற்பட்டு வருகின்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் எமது விழாவில் பிரதம விருந்தினராக வருகை தந்தமையையிட்டு நாம் பேருவகையடைகின்றோம். இவரது சேவை எமது பிரதேசத்தில் தொடரவும், அவரது சேவையால் எமது கல்வி வலயம் சிறக்கவும் இவ்வேளையில் வாழ்த்தி நிற்கின்றோம்.

இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது கல்வி வலயத்தின் ஆசிரிய வள நிலைய முகாமையாளர் திரு. ஞா. இரத்தினசிங்கம் அவர்கள் கல்வியங்காட்டை வதிவிடமாகக் கொண்டவர். சிறந்த விஞ்ஞான ஆசிரியராக,ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி பின்னாளில் ஆசிரிய வள

நிலைய முகாமையாளராக நியமனம் பெற்றுப் பணியாற்றி வருகின்ற இவர் எமது பாடசாலைகளின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறையுடன் செயற்படுபவர். பல தடவை எமது பாடசாலைக்கு வருகை தந்து குறிப்பாக ஆசிரியர், மாணவர் செயற்பாடுகள் பலவற்றை நடாத்தியிருக்கின்றார். யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் ஆற்றல் மிக்க வளவாளராக செயற்பட்டுக் கொண்டிருக்கும் அவரின் வருகையால் நாம் மகிழ்வடைகின்றோம். இவரின் சேவை எமது பிரதேசத்தில் தொடரவும், அவர் தமது சேவையில் சிறந்து விளங்கவும் இவ் வேளையில் வாழ்த்தி நிற்கின்றோம்.

அடுத்து கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்கின்ற திரு. சபா. குகதாசன் அவர்கள் இடைக்காடு, அச்சுவேலியை வதிவிடமாகக் கொண்ட இவர் யா / ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் நீண்டகாலம் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். ஆசிரியப் பணியில் சிறந்து விளங்கிய இவர் மிக நீண்டகாலமாக குகன் கல்வி நிறுவனத்தை தளர்வின்றி நடாத்தி வருகின்றார். இது இவரின் சிறந்த ஆசிரியப் பணிக்கும், நிர்வாகத் திறனுக்கும் சான்றாக விளங்குகின்றது. பலவேறு பொதுப்பணிகளுக்கும், சமூக நலனுக்குமாக உதவிகள் புரிந்து வரும் இவர் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் விளங்குகின்றார். இவரின் வருகையால் நாமும் பெருமகிழ்வடைகின்றோம். இவரின் பணியால் மேன்மேலும் சிறப்படைய நாமும் இவ்வேளையில் வாழ்த்துகின்றோம்.

மேலும் இன்றைய விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டுள்ள பழைய மாணவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முந்நாள் செயலாளர் திரு. கந்தையா சுந்தரவேல் அவர்கள் இப்பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காக நீண்டகாலமாகத் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டு வருகின்றார். எமது பாடசாலையின் பழைய மாணவனாக, பெற்றோராகவிருந்து அதன் முன்னேற்றத்தில் நீண்டகாலமாக உழைத்து வந்திருக்கிறார். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் மாத்திரமன்றி பலவேறு பொது அமைப்புக்கள்,சங்கங்களில் அங்கம் வகிப்பதன் ஊடாக இப்பிரதேசத்தின் முன்னேற்றத்துக்காக தொடர்ந்து உழைத்து வருகின்றார். அத்துடன் வலிகாமம் கிழக்குப் பிரதேச மத்தியஸ்த சபையின் உப தவிசாளராகவும், சமாதான நீதவானாகவும் விளங்குகின்றார். இவரின் வருகையால் நாம் மகிழ்வடைகின்றோம். இவரின் பணி எமது பாடசாலைக்கும், பிரதேசத்துக்கும் நிறைவாகக் கிடைக்கவும்,அவர் தம் சேவையால் சிறப்புறவும் இவ்வேளையில் வாழ்த்துகின்றோம்.

மேலும் இவ் விழா சிறப்புற நிறைவேற ஒத்துழைத்த, மற்றும் பங்களித்த அனைவரையும் குறிப்பாக எமது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்திக் கொண்டு எனது அறிக்கையினைத் தொடருகின்றேன்.

**பாடசாலையின் அறிமுகம்:**

வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் அதிகஷ்டப் பிரதேசம் என்ற விசேட நாமத்தோடு தனித்து விடப்பட்ட கிராமமாக விளங்குகின்ற இக்கிராமத்தில் தனியொரு பாடசாலையாக விளங்குகின்ற இப்பாடசாலை இக்கிராமத்தின் கலங்கரை விளக்காக, பாலைவனத்துக்குள் ஒரு பசுஞ்சோலையாக, வறுமையிலும் வளமிக்க பாடசாலையாக வளர்ந்து வரும் நிலையில் 105 ஆவது ஆண்டில் கால்பதித்து நிற்கின்றது. தொடரும் பயணத்தில் செல்ல வேண்டிய தூரம் இன்னும் நிறையவே உண்டு. தடைகளைத் தாண்டி இலக்கினை நோக்கிய எமது பயணத்தைத் நாம் நம்பிக்கையுடன் தொடருவோம்.

**எமது மாணவர் விபரம்:**

இப்பிரதேசத்தில் வசிக்கும் கல்விகற்கும் வயதுடைய அனைவரும் இப் பாடசாலையின் மாணவர்களாக விளங்குகின்றனர். கட்டாயக் கல்விக்குரிய வயதுடைய அனைவரும் எமது மாணவர்களாகக் கற்று வருகின்றனர். எனினும் ஒழுங்கற்ற வரவினை உடைய சில மாணவர்கள் இன்னம் இருக்கவே செய்கின்றனர். பெற்றோர் சார்ந்த பல குறைபாடுகள் இதற்குத் துணையாக இருப்பது இனங்காணப்பட்டுள்ளது.

**மாணவர் எண்ணிக்கை - 2014**

| தரம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 07 | 15 | 22 |
| 2 | 09 | 08 | 17 |
| 3 | 12 | 17 | 29 |
| 4 | 10 | 12 | 22 |
| 5 | 10 | 10 | 20 |
| **மொத்தம்** | **48** | **62** | **110** |
| 6 | 10 | 11 | 21 |
| 7 | 16 | 17 | 33 |
| 8 | 17 | 13 | 30 |
| 9 | 06 | 08 | 14 |
| **மொத்தம்** | **49** | **49** | **98** |
| **முழு மொத்தம் (1 – 9)** | **97** | **111** | **208** |
| 10 | 10 | 08 | 18 |
| 11 | 07 | 04 | 11 |
| **மொத்தம்** | **17** | **12** | **29** |
| **முழு மொத்தம்** | **114** | **123** | **237** |

சிறப்பம்சங்களாக ஒவ்வொரு தரத்திலும் 80% மேற்பட்ட **உயர்வான வரவு வீதம்** பேணப்படுகின்றது

- ❖ **தினவரமின்மை, இடைவிலகல்** என்பன மிகக் குறைந்த மட்டத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.
- ❖ வரவு ஒழுங்கீனமான மாணவர்கள் இனங்காணப்பட்டு வரவு ஊக்கவிக்கப் படுகின்றது.

இவ் ஆண்டில் எம்மிடம் கற்று வருகின்ற அனைத்து மாணவர்களினதும் எதிர்காலம் சிறக்க இவ்வேளையில் வாழ்த்துகின்றேன்.

**எமது ஆசிரியர் விபரம்:**

எமது பாடசாலையில் தற்போது பத்தொன்பது ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களுள் இருவர் பகுதிநேர ஆசிரியர்களாகவும் மற்றும் ஒருவர் முழுநேரக் கற்கை விடுமுறையிலும் மேலும் தற்காலிக இணைப்புடன் ஒருவரும் உள்ளனர். அத்துடன் மேலும் ஒருவர் தொண்டர் ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றனர்.

அதிகஸ்டப் பிரதேசப் பாடசாலையான இப்பாடசாலையில் பல்வேறு சிரமங்களுடனும், நீண்டதூரப் பயணத்தினூடாகவும் வருகை தந்து பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரதும் அர்ப்பணிப்பான சேவைக்கும், முயற்சிக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் இவ்வேளையில் தெரிவித்து நிற்கின்றேன்.

## Accadamy Staff – 2014

| | | | |
|---|---|---|---|
| 01 | Mr.J.A.Thavanayagam | SLPS 2-11 | BA,PGDE,MED,D.S.M **Principal** |
| .02 | Mr.M.Perinpamoorthy | SLTS-2-11 | Sp.Trd-Com,Bed **Vice- Principal** |
| 03 | Mr.K.Kirubakaran | SLTS-3-1 | BA –Tamil |
| 04 | Mr.T.Jeevananthan | SLTS-3-1 | BA(Hons) PGDE |
| 05 | Mrs.C.Ilango | SLTS-2-11 | Sp.Trd-Science,BA,PGDE |
| 06 | Mrs.J.Jebaratnathas | SLTS-3-1 | BA |
| 07 | Mr.S.Indrakumar | SLTS-2-11 | BSc,PGDE -Maths |
| 08 | Mrs.V.Navaneethan | SLTS-2-11 | BA(Hons) PGDE |
| 09 | Mr.R.Elango | SLTS-2-11 | N.C.Dip-Pri |
| 10 | Mrs.J.Pirabakaran | SLTS-3-1 | BFA (Music) |
| 11 | Mrs.S.Keerthisingan | SLTS-3-1 | BFA (Art) **(3days)** |
| 12 | Mrs.K.Suganthan | SLTS-2-11 | HNDA, PGDE **(3days)** |
| 13 | Mr.S.Mohanakirishnan | SLTS--1 | Sp.trd English |
| 14 | Mr.G.Thirumalalagan | SLTS--1 | B.Com,PGDE,MEd |
| 15 | Mr.Y.Thusyanthan | SLTS-3-1 | N.C.Dip-Sp.Edu |
| 16 | Miss.A.Ranjithavani | SLTS-3-1 | N.C.Dip-Pri |
| 17 | Mrs.K.Laleesan | SLTS-2-11 | Sp.TrdScience,BA,PGDE |
| 18 | Mrs.S.Chandragoban | SLTS-3-1 | BA(Hons) PGDE |
| 19. | Miss.R.Rasitha | --- | volunteer. volunteer |

**இவ்வாண்டில் புதிதாக இணைந்து கொண்ட ஆசிரியர்கள்:**

1. திருமதி. கவிதா லலீசன் - விஞ்ஞான ஆசிரியர்
2. திரு. ச. மோகனகிருஸ்னன் - ஆங்கில ஆசிரியர்
3. திரு. க. திருமாலழகன் - வர்த்தக ஆசிரியர்
4. திரு. யோ. துஸ்யந்தன் - விசேடகல்வி ஆசிரியர்
5. செல்வி. ஆ. றஞ்சிதவாணி - ஆரம்பக்கல்வி ஆசிரியர்
6. திருமதி ச. சத்தியரஜனி - தற்காலிக இணைப்பில்

7. செல்வி. இ. ரஜிதா - தொண்டர் ஆசிரியர்

இவர்கள் அனைவரையும் மிகுந்த மகிழ்வுடன் வரவேற்பதுடன் அவர்களின் பணியால் எம் வித்தியாலயம் சிறப்படைய இவ்வேளையில் வாழ்த்துகின்றேன்,

**இடமாற்றம் பெற்றுச் சென்றோர்:**

1. திரு. ந சிவாகரன் - விவசாய ஆசிரியர்
2. திருமதி. ச. தவக்குமார் - ஆரம்பக்கல்வி ஆசிரியர்
3. திரு. து. சயந்தன் - ஆங்கில ஆசிரியர்
4. திரு. பொ. பரஞ்சோதி - ஆரம்பக்கல்வி ஆசிரியர்
5. திரு. இ. கோகுலன் - ஆங்கில ஆசிரியர்

இவர்கள் அனைவரும் எமது வித்தியாலயத்தில் ஆற்றிய உயர்வான சேவைக்காக எனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்கள் அனைவரும் தம் சேவையில் சிறப்புற இவ் வேளையில் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**கற்கை விடுமுறை / மற்றும் கற்கை :**

திருமதி சந்திரா இளங்கோ ஆசிரியை கல்வி முதுமாணிக் கற்கைக்காக கற்கை விடுமுறையில் உள்ளார். அவர் தம் கற்கையில் உயர் தகைமையைப் பெற இவ்வேளையில் வாழ்த்துகின்றேன்

மேலும் திரு. து. ஜீவானந்தன், திருமதி வித்யா நவநீதன் ஆகியோர் இவ் ஆண்டில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியில் அதிவிசேட சித்தியையும், திருமதி. சத்தியரஜனி சந்திரகோபன் விசேட சித்தியையும் பெற்றுள்ளனர். இவர்கள் மூவரையும் இவ்வேளையில் வாழ்த்துகின்றேன்.

**தொண்டர் ஆசிரியர்:**

இவ்வாண்டில் எமது பாடசாலையிலிருந்து இரண்டு பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டார்கள். அவர்களுக்கான பதில் ஆசிரியர்கள் கல்வித் திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட போதிலும் அவர்கள் இங்கு கடமையேற்கவில்லை. இதன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக தரம் இரண்டுக்கு தொண்டர் ஆசிரியராக எமது பழைய மாணவி இ. ரஜிதா பணியாற்றி வருகின்றார். தனது பிரதேசத்திற்காக சேவையாற்ற வேண்டுமென்ற சுயவிருப்புடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் பணியாற்றுகின்றார். இவரது எதிர்காலம் சிறக்க வேண்டுமெனவும் இவ்வேளையில் வாழ்த்துகின்றேன்.

**கல்வி சாரா ஊழியர்கள்:**

திரு தெ. ரகுவர்மன், திரு. இ. சதானந்தராசா ஆகியோர் எமது பாடசாலையில் கல்வி சாரா ஊழியர்களாகப் பணியாற்றி வருகின்றனர். இவர்களின் பணிக்காக இவ்வேளையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களும் சேவையால் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

**கலைத்திட்டச் செயற்பாடுகளும், பெறுபேற்று நிலைகளும்:**

கலைத்திட்ட அமுலாக்கத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில் எமது பௌதீக, மனித வளத்தினை உச்ச அளவில் பயன்படுத்தி முழுமையான விளைதிறனை எய்தும் நோக்குடன் முயன்று வருகின்றோம். அதன் விளைவாக மாணவர்களின் கற்றல் அடைவு மட்டத்தில் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது.

**ஆரம்பக்கல்வி:**

ஆரம்பக்கல்வியில் தொடர்ச்சியாக பலவருடங்களாக பொருத்தமான அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை நிலவிவருகின்றது. இருந்தும் இருக்கின்ற ஆசிரிய வளத்தின் மூலம் செயற்பாடுகளை சிறப்பாக நிறைவேற்றி வருகின்றோம்.

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை:**

புலமைப்பரிசில் பரீட்சையில் தொடர்ச்சியான முன்னேற்றம் ஏற்பட்டுவருகின்றது. 2014 இல் 17 பேர் தோற்றினர். இவர்களுள் 09 பேர் 112 முதல் 155 புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இது 52.9 வீதமாகும். 70 முதல் 99 புள்ளிகள் வரை 03 பேர் பெற்றுள்ளனர். இது 17.6 வீதமாகும். அந்த வகையில் 70.5 வீதமானோர் சித்திமட்டத்தை அடைந்துள்ளனர். இது பெறுபேற்றின் தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. 48 முதல் 70 புள்ளி வரை 05 பேர் பெற்றுள்ளனர்.இது 29.4 வீதமாகும். எதிர்காலத்தில் சித்தி மட்டத்தினை 100 வீதமாக்குதல் எமது இலக்காகும் அதற்காக எமது முயற்சிகள் தொடரும்.

| Year | Total Application | Marks 70-99 | 100< | Cutout < |
|---|---|---|---|---|
| 2010 | 13 | 23% | 04% | - |
| 2011 | 20 | 20% | 10% | - |
| 2012 | 22 | 55% | 10% | 4.5% |
| 2013 | 17 | 35.% | 23.5% | - |
| 2014 | 17 | 17.6% | 52.9% | --- |

இவ் ஆண்டுக்கான பெறுபேற்று உயர்வில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்ட தரம் 5 க்கான ஆசிரியை செல்வி ஆ. றஞ்சிதவாணி ஆசிரியரை இவ்வேளையில் மனமுவந்து வாழ்த்துகின்றேன். பல வருடங்களாக தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை வழிநடத்தி பல பாடசாலைகளில் சாதனை நிகழ்த்திய இவ் ஆசிரியை எமது பாடசாலைக்குக் கிடைத்தமை பெரும் வரப்பிரசாதமாக அமைந்தள்ளது. இவரது பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**க. பொ. த சா. தர பரீட்சை :**

க. பொ. த சா. தரப்பரீட்சை 2012 இல் சிறப்பான பெறுபேற்றினை வெளிப்படுத்தி வலயமட்டத்தில் உன்னத இடத்தினைப் பெற்றுக் கொண்ட இப்பாடசாலை 2013 இல் சற்றுப் பின்னடைவான பெறுபேற்றினைப் பெற வேண்டியதாயிற்று. இவ்வாண்டில் பெறுபேற்றினை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

| பாடம் | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| 1. தமிழ்மொழி | **86%** | **100%** | **100%** |
| 2. கணிதம் | **36%** | **68%** | **27.2%** |
| 3. விஞ்ஞானம் | **73%** | **76%** | **36.3%** |
| 4. வரலாறு | **82%** | **100%** | **72.7%** |
| 5. ஆங்கிலம் | **5%** | **25%** | **09.0%** |
| 6. சைவநெறி | **100%** | **100%** | **100%** |
| 7. புவியியல் | **25%** | **92%** | **87.5%** |
| 8. சங்கீதம் | **75%** | **100%** | **100%** |
| 9. சித்திரம் | **100%** | **100%** | **100%** |
| 10. விவசாயம் | **91%** | **82%** | **88.8%** |
| 11. குடியுரிமை | **--** | **--** | **100%** |
| A/L தகமை | **36%** | **68%** | |

- அண்மைய ஆண்டுகளில் தொடர்ச்சியாக கணித, விஞ்ஞான துறையில் உயர்தரம் கற்கும் மாணவர்களை வெளியீடு செய்து வருகின்றமை சிறப்பம்சமாகும்.
- தமிழ், சைவநெறி, சங்கீதம், சித்திரம் ஆகிய பாடங்களில் தொடர்ச்சியாக 100% பெறப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**பாடசாலை நூலக வசதி:**

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ள வகையிலான வசதி கொண்ட நூலகம் எமது பாடசாலையில் செயற்படுகின்றது. மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை தூண்டும் வகையில் ஊக்குவிப்புக்களும் பயனுள்ள புத்தகங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வோராண்டிலும் கணிசமான தொகை புத்தகங்கள் புதிதாக சேர்க்கப்படுகின்றன. தினமும் பத்திரிகை வாசிப்பதற்கான வசதியும் வழங்கப்பட்டுள்ளது. வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புத்தகக்கண்காட்சி நடாத்தப்பட்டது. அத்துடன் யாழ் பொதுசன நூலகத்தின் நடமாடும் நூலக சேவையும் இவ்வாண்டில் நடாத்தப்பட்டது.

**விசேட கல்வி அலகு:**

இவ் ஆண்டில் விசேட கல்வி ஆசிரியர் நியமிக்கப்பட்டதன் காரணமாக எமது பாடசாலையில் விசேட கல்வி அலகு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் திரு. யோ. துஸ்யந்தன் அவர்களது சேவை தொடர வாழ்த்துகின்றேன்.

**கல்விக் கண்காட்சி:**

இவ்வாண்டில் பாட ரீதியிலான கல்விக் கண்காட்சி நடாத்தப்பட்டது. அனைத்து பாடங்களையும் உள்ளடக்கிய மாணவர்கள், ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் சார்ந்த ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இக் கண்காட்சி கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. எஸ் சற்குணராசா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்:**

இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க சாதனையாக கருதத்தக்க நிகழ்வுகள் சில இடம்பெற்றுள்ளது.

- **சமூக விஞ்ஞானப் போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றமை:**

சமூக விஞ்ஞானப் போட்டியியல் தேசிய மட்டத்தில் 3ம் இடத்தினை பெற்றமை சிறப்பம்சமாகும். தேசிய மட்ட வெற்றியைப் பெற்றுக் கொண்ட செல்வன் கேசவரூபன் மதுமிலன் மேலும் மேலும் முயற்சியில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன். இவரை வழிப்படுத்திய ஆசிரியர் திரு. மு. பேரின்பமூர்த்தி அவர்களையும் இந் நன்னாளில் வாழ்த்துகின்றேன். இவ் ஆசிரியர் கல்வி வலயத்தால் நடாத்தப்பட்ட கௌரவிப்பு விழாவில் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- **விளையாட்டு நிகழ்வுகள்:**

இவ் ஆண்டில் முக்கிய நிகழ்வாக பெண்கள் கிரிக்கட் அணி, பெண்கள் எல்லே அணி (19 வயது பிரிவு) ஆகிய இரு அணிகளும் வலய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை புரிந்துள்ளமை சிறப்பம்சம் ஆகும். இது எமது பாடசாலை வரலாற்றில் முதற் தடவையாக பெரு விளையாட்டுக்களில் கிடைத்த வெற்றியாகும்.

அத்துடன் கோட்ட மட்ட வலய மட்டப் மெய்வல்லுனர் போட்டிகளிலும் எமது மாணவர்கள் இவ் வாண்டில் பல வெற்றிகளைப் பெற்றுள்ளனர். இதற்காக ஊக்கமளித்து செயற்பட்ட எமது உடற்கல்வி ஆசிரியர் திரு. சி. சிவசொரூபன் அவர்களை இவ் வேளையில் பாராட்டுகின்றேன். தற்போது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சென்றுள்ள இவர் தமது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து உயர்வடைய வாழ்த்துகின்றேன்.

**பான்ட் வாத்திய அணி உருவாக்கப்பட்டமை:**

இவ் ஆண்டின் சிறப்பான நிகழ்வுகளில் ஒன்றாக எமது பாடசாலையில் முதல் தடவையாக பான்ட் வாத்திய அணி உருவாக்கப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதி மற்றும் SLIG மூலதன ஒதுக்கீடு என்பவற்றின் மூலம் இதற்கான வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அணியினருக்கான சீருடைக்கான நிதி பெற்றோரிடமும் மற்றும் சில நன்கொடைகள் மூலமும் பெறப்பட்டது. இதற்காக ஒத்துழைத்த அனைவருக்கும் இவ் வேளையில் நன்றி கூறுகின்றேன்.

**சரஸ்வதி தேவிக்கான ஆலயம் அமைத்தல்:**

இவ் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடாக சரஸ்வதி தேவிக்கான ஆலயம் நிர்மானிக்கப்பட்டமையையும் குறிப்பிடலாம். எமது பாடசாலையில் அனைத்து மாணவர்களும் சைவர்களாக இருந்த போதிலும் அவர்கள் நாளாந்தம் வழிபாடு செய்வதற்கு ஒரு வழிபாட்டிடம் இல்லாத நிலை இருந்து வந்தது. தனியான மண்டப வசதியோ பிரார்த்தனைக் கூடங்களோ இல்லாத நிலையில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டு வந்தது. அதனை நிவர்த்திக்கும் வகையில் இவ் ஆலயம் நிர்மானிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் ஆகியோரின் முழுமையான பங்களிப்புடன் இது நிர்மானிக்கப்பட்டது. இதன் நிர்மானத்திற்கு பங்களித்த அனைவருக்கும் இவ் வேளையில் எனது நன்றிகள்.

**எமது அவசிய தேவைகள்:**

எமது பாடசாலை அதிகஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள போதிலும் இக்கிராமத்திற்கு நிறைவான சேவையை வழங்க வேண்டிய முழுமையான பொறுப்பைக் கொண்டுள்ள பாடசாலையாகும்.இப்பாடசாலையை வளமிக்க பாடசாலையாக மாற்றி இக்கிராமத்தின் கல்வித் தேவையை நிறைவு செய்ய வேண்டியது அவசியமாகின்றது. அந்த வகையில் சில அவசியமான தேவைகள் எம்மிடம் உள்ளன.

- எமது பாடசாலையில் நிலவுகின்ற இடப்பற்றாக் குறை அதாவது வகுப்பறை வசதிய போதாமை முக்கிய பிரச்சனையாகவுள்ளது. துவிச்சக்கர வண்டித்தரிப்பிடத்தையும் வகுப்பறையாக மாற்றிப்பயன்படுத்தி வருகின்றோம். கடந்த மூன்று வருடங்களாக இத்தேவையை நிறைவேற்ற முயன்று வருகின்றோம். எமது தேவை திணைக்களத்தால் உணரப்பட்ட போதிலும் இன்றுவரை சாத்தியமாகவில்லை.
- பாடசாலையின் விளையாட்டு மைதானத்தைப் புனரமைத்துக் கொள்வதற்கான நிதி வசதியை ஏற்படுத்துதல்.
- பாடசாலைக்குப் பாதுகாப்பான வேலியை அமைத்துக் கொள்வதற்கான வசதியை ஏற்படுத்துதல். குறிப்பாக பின்புற வேலியை சுற்றுமதில் அமைத்துப் பூரணப்படுத்த வேண்டியுள்ளது.
- விளையாட்டு நிகழ்வுகளுக்கான பொருத்தமான சீருடையைத் தயார் செய்வதற்கான நிதிவசதியை ஏற்படுத்தல்

ஆகியவற்றை எமது பிரதான தேவைகளாகச் சமர்பிக்கின்றோம், இத்தேவைகளை நிறைவேற்ற முன்வருமாறு பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அவைவரையும் வேண்டுகின்றோம்.

**எமது நன்றிகள்:**

1. எமது பாடசாலைச் செயற்பாட்டிற்கு துணையாகச் செயற்படுகின்ற எமது வலயக் கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவர்க்கும் எமது நன்றிகளை இவ்வேளையில் தெரிவிக்கின்றோம்.
2. மேலும் பாடசாலை முன்னேற்றத்திற்காக உதவி புரிகின்ற பெற்றோர்கள் பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்
3. எமது பாடசாலையின் முன்னேற்றத்திற்காக என்னோடிணைந்து அர்ப்பணிப்போடு பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் இவ்வேளையில் நன்றியைத் தெரிவித்து நிற்கின்றேன்.
4. இறுதியாக இன்றைய இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது ஆசிரிய வள நிலைய முகாமையாளர் அவர்களுக்கும் ஓய்வு நிலை பிரதி அதிபர் திரு. சபா குகதாசன் அவர்களுக்கும், திரு. க. சுந்தரவேல் அவர்களுக்கும் மற்றும் வருகை தந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு நிறைவு செய்கின்றேன்.

நன்றி, வணக்கம்

07.11.2014

அதிபர்

திரு.J. A. தவநாயகம்

# பரிசில் பெறும் மாணவர் விபரம்

# PRIZE WINNERS

**1. கல்வி அடைவு மட்டம் - 2013**

| Grade<br>தரம் / வகுப்பு | Supper Proficiency<br>அதிவிசேடம் | General Proficiency<br>விசேடம் | General Progress<br>சாதரணதரம் |
|---|---|---|---|
| 1 | ர. துவாரகன் | | ச. சுயானுஜன் |
| | கௌ. பானுஜா | | க. கயானிகா |
| | ப. வைஸ்ணகி | | த. துளசிகா |
| 2 | கே. கேமிதன் | ப. கனிஸ்ரா | |
| | பொ. சுவேதன் | கி. துஷானிகா | |
| | த. பபித்திரன் | க. கபில்ரன் | |
| | ப. வைஸ்நாத் | மா. நித்தியா | |
| | கு. தனுஷகர் | | |
| | வி. அப்சனா | | |
| 3 | ஸ்ரீ. புதுமிகன் | சி. வஜிந்தன் | இ. லதுர்சன் |
| | | க. சந்தோஸ் | ச. துளசிகா |
| | | வி. விதயா | தி. தமிழ்விழி |
| | | லி. அஸ்வினி | வி. வினோதினி |
| | | | வி. வினோபா |
| 4 | ப. வைஸ்ணவி | ப.கம்ஷா | கி. நிலக்சன் |
| | க. ஜனோபா | | சு. தீபிகா |
| | | | சு. ரூபிகா |
| | | | ஜெ. அபிரா |
| 5 | த. அபிநயா | வி. தர்மிஷன் | மோ .டினோஜன் |
| | பொ. சுவேதா | கி. ஜீவிகா | இ. திலக்சிகன் |
| 6 | கே. மதுமிலன் | உ. சாளினி | செ. தமிழரசன் |
| | கோ. ஜக்ஷன் | கி. நிலானி | மா. பவித்திரன் |
| | | வி. யானுசா | ச. சாஜகான் |
| | | | ச. சோபிதன் |
| | | | ச. தேனுஜா |
| | | | து. சுகிர்தா |
| | | | பி. மதுர்சா |
| 7 | | வி. நிறோசன் | பி. பிரதாபன் |
| | | க. பவீசன் | கு. ஜீவசர்மா |
| | | | ஜெ. ஜெசித்தா |
| | | | சு. சாருஜா |
| | | | க. திவ்யா |
| 8 | கோ. விதுசன் | க. சுஜீவன் | ஜெ. அஜிந்தா |
| | | பா. தினேஷா | மு. யாழினி |
| | | க. நிருத்திகா | ச. கஜீபனா |
| | | க. சுஜீவா | |
| 9 | ச. சஸ்ரீபா | வி. ஜனித்தா | லி. நிசாந்தாஸ் |
| | | | க. கனுஜன் |
| | | | பு. துபாசன் |

| | | | |
|---|---|---|---|
| | | | செ. லகீசன் |
| | | | வி. விதுந்தன் |
| | | | க. சஞ்சித் |
| | | | யோ. யாழினி |
| | | | கி. விஸ்ணுகா |
| | | | லோ. கிசானி |
| 10 | | செ. லவண்யா | கி. ஜீவகன் |
| | | | ஜெ. அஜிந்தாஸ் |
| | | | வி. ஜனன் |
| | | | க. பிரசன் |
| | | | கு. ஜெசிந்தா |
| 11 | | அ. நிருபா | பு. மதுர்சா<br>த. தர்சிகா |

**இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் வெற்றி பெற்றோர் விபரம்**

1. தமிழ் மொழித்தினம் - 2013

| பிரிவு | பெயர் | நிகழ்ச்சி | கோட்ட மட்டம் |
|---|---|---|---|
| 1 | பொ. சுவேதா | வாசிப்பு | 2 ஆம் இடம் |
| 2 | உ. சாளினி | வாசிப்பு | 3 ஆம் இடம் |
| 2 | | குழு இசை | 2 ஆம் இடம் |
| | | விவாதம் | 3 ஆம் இடம் |
| | | வில்லுப்பாட்டு | கோட்டம் - 1<br>வலயம் - 3 |

2. சமூக விஞ்ஞான பொது அறிவுப்போட்டி – 2013

| பெயர் | தரம் | இடம் |
|---|---|---|
| கே. மதுமிலன் | 6 | வலயம், மாகாணம் - 1 |
| த. தர்சிகா | 11 | வலயம் -1 |
| லி. ஜெசிந்தாஸ் | 11 | வலயம் -2 |
| கோ. விதுசன் | 8 | கோட்டம் -3 |

3. அனர்த்த முகாமைத்துவப் போட்டி – 2013

கே.மதுமிலன் கோட்டமட்டம் 4 ஆம் இடம்

4. தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா

கீழ்ப்பிரிவு – பேச்சு

செல்வி ப.வைஸ்ணவி – 3 ஆம் இடம் மாவட்ட மட்டம்

**5. திருக்குறள் மனனம் - ஆரம்பப் பிரிவு**

1. ப.வைஸ்ணகி தரம் 1 கோட்டம் - 1, வலயம் - 2
2. ப.வைஸ்ணவி தரம் 4 கோட்டம் - 2, வலயம் - 3

**6. கணித வினாவிடைப் போட்டி**

1. செல்வி.செ.லவண்யா தரம் 10 கோட்டம் - 3

**7. மெய்வன்மைப் போட்டி – 2013**

| இல | பிரிவு | நிகழ்ச்சி | பெயர் | கோட்ட மட்டம் |
|---|---|---|---|---|
| 1 | 13 வயது ஆண் | நீளம் | கு.ஜீவசர்மா | இரண்டாம் இடம் |
| 2 | 15 வயது பெண் | 400M | கு.தர்மினி | இரண்டாம் இடம் |
| 3 | 15 வயது பெண் | குண்டு | யோ.யாழினி | இரண்டாம் இடம் |
| 4 | 15 வயது பெண் | ஈட்டி | யோ.யாழினி | இரண்டாம் இடம் |
| 5 | 15 வயது பெண் | தட்டு | யோ.யாழினி | மூன்றாம் இடம் |
| 6 | 19 வயது பெண் | குண்டு | பா.ஜனார்த்தனி | மூன்றாம் இடம் |
| 7 | 19 வயது ஆண் | தட்டு | லி.ஜெசிந்தாஸ் | முதலாம் இடம் |
| 8 | 19 வயது ஆண் | ஈட்டி | யோ.சர்மிகன் | முதலாம் இடம் |
| 9 | 15 வயது பெண்கள் | 4X100 M | | மூன்றாம் இடம் |

**8. க.பொ.த சாதாரண தரப்பரீட்சை - 2013 டிசம்பர்**

1. அ. நிருபா - சிறப்புத் தகமை – 5A, 2B, C, S

**க. பொ. த உயர்.தரத்திற்கு தகைமை பெற்றோர்.**

1. த. தர்சிகா
2. கு. சர்விகா
3. பு. மதுர்சா
4. யோ. நிதர்சன்

**9. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2014.**

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம்**

| இல | பெயர் | புள்ளி |
|---|---|---|
| 1. | க. ஜனோபா | 155 |
| 2. | ப. வைஷ்ணவி | 148 |

| | | |
|---|---|---|
| 3. | ப. கம்ஷா | 143 |
| 4. | சு. ரூபிகா | 138 |
| 5. | சு. தீபிகா | 135 |
| 6. | ஜெ. அபிரா | 132 |
| 7. | கி. வானதி | 129 |
| 8. | கி. நிலக்ஷன் | 128 |
| 9. | சி. கஜானா | 112 |

**70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம்**

| **இல** | **பெயர்** | **புள்ளி** |
|---|---|---|
| 1. | தெ. யதுஷன் | 86 |
| 2. | ஜெ. ருபெக்ஷா | 84 |

**10. பாடசாலை வரவு ஒழுங்கான மாணவர் விபரம் - 2013**

தரம் - 3 - தி. தமிழ்விழி

தரம் - 5 - வி. தர்மிசன், க. கஜானன், கி. ஜீவிகா

தரம் - 7 - வி. நிரோஜன், பி. பிரதாபன், க. பவீஷன், ஜெ. ஜெசித்தா

தரம் - 8 - கோ. விதுசன், பா. தினேசா, க. நிருத்திகா, க. சுஜீவா

தரம் - 9 - லி. நிசாந்தாஸ், க. கனுஜன், பு. துபாசன், லோ. கிசாணி, வி. விதிந்தன், செ. லகீசன், ப. கஜீபன், கி. விஷ்ணுகா

தரம் - 10 - செ. கோகுலராஜ், இ. கல்வனா, வி. ஜெனன், க. பிரஷன், கி. ஜீவகன், செ. லவண்யா

**11. விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கோட்ட, வலய மட்ட மாணவ்களுக்கான சித்திரப் போட்டி வெற்றி பெற்ற மாணவர் விபரம்**

செல்வி. கே. சாதனா

## ENGLISH DAY COMPETITION - 2014

| No | Name | Grade | Place | Event |
|---|---|---|---|---|
| 1 | K. Kemithan | 3 | 1 | Copy writing |
| 2 | V. Abshana | 3 | 2 | |
| 3 | P. Vaishanath | 3 | 3 | |
| 4 | K. Kemithan | 3 | 1 | Reading |
| 5 | P. Vaishanath | 3 | 2 | |
| 6 | K. Thanuskar | 3 | 3 | |
| 7 | K. Kemithan | 3 | 1 | Recitation |
| 8 | K. Thushanika | 3 | 2 | |
| 9 | K. Thanuskar | 3 | 3 | |
| 1 | K. santhosh | 4 | 1 | Copy writing |
| 2 | S. Thulasika | 4 | 2 | |
| 3 | L. Asvini | 4 | 3 | |
| 4 | S. Puthumikan | 4 | 1 | Reading |
| 5 | L. Ashvini | 4 | 2 | |
| 6 | V. Vithya | 4 | 3 | |
| 7 | S. Puthumikan | 4 | 1 | Recitation |
| 8 | L. Ashvini | 4 | 2 | |
| 9 | S. vaginthan | 4 | 3 | |
| 10 | P. Vaisnavi | 5 | 1 | Copy writing |
| 11 | P. Kamsha | 5 | 2 | |
| 12 | K. Jenopa | 5 | 3 | |
| 13 | P. Vaisnavi | 5 | 1 | Reading |
| 14 | K. Jenopa | 5 | 2 | |
| 15 | K. Vanathy | 5 | 3 | |
| 16 | P. Vaisnavi | 5 | 1 | Recitation |
| 17 | K. Jenopa | 5 | 2 | |
| 18 | K. Vanathy | 5 | 3 | |
| 19 | P. Suvetha | 6 | 1 | Recitation |
| 20 | K. Jeevika | 6 | 2 | |
| 21 | T. Abinaya | 6 | 3 | |
| 22 | P. Suvetha | 6 | 1 | Copy writing |
| 23 | K. Jeevika | 6 | 2 | |
| 24 | P. Suvetha | 6 | 3 | |
| 25 | P. Suvetha | 6 | 1 | Creative writing |
| 26 | P. Suvetha | 6 | 1 | Dictation |
| 27 | T. Abinaya | 6 | 2 | |
| 28 | K. Jeevika | 6 | 3 | |
| 29 | K. Mathumilan | 7 | 1 | Recitation |
| 30 | K. Jakeeshan | 7 | 2 | |
| 31 | K. Nilani | 7 | 3 | |
| 32 | V. Janusha | 7 | 1 | Copy writing |
| 33 | K. Mathumilan | 7 | 2 | |
| 34 | K. Nilani | 7 | 3 | |
| 35 | K. Mathumilan | 7 | 1 | Creative |

| | | | | |
|---|---|---|---|---|
| 36 | K. Jakeeshan | 7 | 2 | writing |
| 37 | K. Nilani | 7 | 3 | |
| 38 | K. Mathumilan | 7 | 1 | Dictation |
| 39 | K. Jakeeshan | 7 | 2 | |
| 40 | K. Nilani | 7 | 3 | |
| 41 | V. Nirojan | 8 | 1 | Recitation |
| 42 | K. Amuthan | 8 | 2 | |
| 43 | K. Baveshan | 8 | 1 | Copy writing |
| 44 | T. Regintha | 8 | 2 | |
| 45 | S. Saruja | 8 | 1 | Creative writing |
| 46 | K, Bavishan | 8 | 2 | |
| 47 | V. Nirojan | 8 | 1 | Dictation |
| 48 | S. Saruja | 8 | 2 | |
| 49 | K. Vithushan | 9 | 1 | Recitation |
| 50 | K. Niruththika | 9 | 2 | |
| 51 | J. Ajentha | 9 | 3 | |
| 52 | P. Thenesha | 9 | 1 | Copy writing |
| 53 | M. Yalini | 9 | 2 | |
| 54 | K. Vithushan | 9 | 3 | |
| 55 | K. Vithushan | 9 | 1 | Creative writing |
| 56 | P. Thenesha | 9 | 2 | |
| 57 | K. Niruththika | 9 | 3 | |
| 58 | K. Vithushan | 9 | 1 | Dictation |
| 59 | K. Niruththika | 9 | 2 | |
| 60 | P. Thenesha | 9 | 3 | |
| 61 | L. Nishanthas | 10 | 1 | Recitation |
| 62 | K. Vishnuka | 10 | 2 | |
| 63 | V. Vithinthan | 10 | 3 | |
| 64 | S. Sasteepa | 10 | 1 | Copy writing |
| 65 | K. Vishnuka | 10 | 2 | |
| 66 | S. Lakeeshan | 10 | 3 | |
| 67 | L. Nishanthas | | | Creative writing |
| 68 | S. Sasteepa | | | |
| 69 | K. Kanujan | 10 | 1 | Dictation |
| 70 | L. Nishanthas | 10 | 2 | |
| 71 | V. Jeniththa | 10 | 3 | |
| 72 | K. Jeevakan | 11 | 1 | Dictation |
| 73 | S. Lavanya | 11 | 2 | |
| 74 | J. Ajenthas | 11 | 3 | |
| 75 | K. Jesintha | 11 | 1 | Copy writing |
| 76 | K. Pirashan | 11 | 2 | |
| 77 | K. Jeevakan | 11 | 3 | |
| 78 | S. Lavanya | 11 | 1 | Creative writing |
| 79 | K. Jeevakan | 11 | 2 | |
| 80 | S. Lavanya | 11 | 1 | Recitation |
| 81 | K. Jesintha | 11 | 2 | |

Divisional level English Day Competition – 2014

K. Vithushan - 2nd Place - Dictation

***************

0778202915

- Jeya Ka

~~077~~ 0716565548